## **RECORD OF DEPOSITION OF WITNESS**

## **IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI**
## **KRISHNAGIRI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS. 22 of 2023 | **DW - 1** | **:** | Cross |
| **Name** | பூவன் | **Father Name** | **:** | மாரியப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 19.11.2025 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் -12.50 PM

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

1. நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் முன்னாள் ராணுவ வீரர் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்தை விலைக்கு வாங்கும் சமயத்தில் எனக்கு என்ன வயது என்றால் சுமார் 15 அல்லது 16 இருக்கும். தாவா சொத்தை விலைக்கு வாங்கும் சமயத்தில் எனக்கு விவரம் தெரியாமல் இருந்தேன் என்று சொன்னால் சரி அல்ல தெரியும். வாதி கணபதி என்னுடன் பணி புரிந்தாரா என்றால் நாங்கள் வேறு வேறு படைப்பிரிவில் பணிபுரிந்தோம். வாதி ராணுவத்தில் பணிபுரியும் சமயத்தில் தான் தாவா சொத்தை விலைக்கு வாங்கினார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு வாதி 3 ஏக்கர் 70 செண்ட் நிலத்திற்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். வாதியும் நானும் உறவினர்கள் என்று சொன்னால் ஒருவகையில் உறவினர்கள் தான். வாதி ஏற்கனவே வாங்கிய சொத்தில் எங்களுக்கு ஏக்கர் 1.70 செண்ட் கொடுக்குமாறு எனது அப்பா கேட்டுக் கொண்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாங்கும் முன் எங்களுக்கு வேறு ஏதாவது சொத்து இருந்ததா என்றால் இருந்தது. எங்கள் சொத்தில் தண்ணீர் வசதி இல்லாததாலும் தாவா சொத்தில் தண்ணீர் வசதி இருப்பதாலும் அவர் உறவினர் என்பதாலும் எங்களுக்கு ஏக்கர் 1.70 செண்ட் நிலத்தை கொடுக்குமாறு எனது தந்தை வாதியை கேட்டுக் கொண்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் நேரடியாக வாங்கினோமா என்றால் ஆமாம் பழனியப்பன் என்பவரிடம் இருந்து நேரடியாக வாங்கினோம். தாவா சொத்தில் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பழனியப்பன் என்பவரிடமிருந்து சொத்தை வாங்கும் போது அளந்து அத்து காட்டி தான் வாங்கினோம் என்று சொன்னால் சரிதான். அதன்படி எங்கள் சொத்தை நாங்கள் அனுபவித்து

வருகிறோம் என்று சொன்னால் சரிதான். பழனியப்பன் என்பவரிடமிருந்து நாங்கள் வாங்கிய ஏக்கர் 1.70 சென்ட் நிலத்தை நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். எத்தனை சென்ட் நிலங்களாக பாகம் பிரித்தோம் என்றால் ஏக்கர் 1.70 சென்ட் நிலத்தை மூன்றாக பிரித்துக் கொண்டோம். அதில் முருகனுக்கு சென்ற பாகத்தை அவரது பிள்ளைகள் பிரித்துக் கொண்டனர் என்று சொன்னால் சரிதான். பிரித்துக் கொண்டபடி அவரவர்கள் அனுபவத்தில் உள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

2. அவ்வாறு எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படும் சமயத்தில் எங்களுடைய சகோதரிகளுக்கு ஏதாவது நிலம் பாகமாக கொடுத்தோமா என்றால் அவர்களுக்கு பணமாக கொடுத்து விட்டோம். நாங்கள் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் பதிவு எண் 2723 / 2023 என்று சொன்னால் எனக்கு சரியாக நினைவில்லை. பாகம் ஏற்படுவதற்கு முன்பு எனது தந்தை பெயரில் விவசாய மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு மின் இணைப்பு பெறும் சமயத்தில் சிட்டா, அடங்கல், புலவரைபடம் ஆகியவற்றை கொடுத்து தான் மின் இணைப்பு பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்பட்ட புல வரைபடத்தில் ஏக்கர் 1.70 சென்ட் நிலம் உள்ளதாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புலவரைபடத்தில் கிணறு எந்த பகுதியில் உள்ளது என்று குறிப்பிட்டு காட்டிதான் மின் இணைப்பு பெற முடியும் என்று சொன்னால் சரிதான் ஆனால் புலவரைபடத்தைக் கொண்டு எங்களால் அளவை கணிக்க முடியவில்லை. நாங்கள் வாங்கிய ஏக்கர் 1.70 சென்ட் நிலம் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது அதன் உட்பிரிவு எண் தெரியுமா என்றால் தெரியும் சர் வே எண்.296 / 2A1. உட்பிரிவு செய்யும் சமயத்தில் வட்ட நில அளவையர் வந்து அளவீடு செய்த பின் தான் உட்பிரிவு செய்வார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. உட்பிரிவு செய்யும் சமயத்தில் எங்களுக்கு கெக்டர் 0.69 . 0 தீர்வை 1.44 என்று ராம கவுண்டர் மகன் மாரியப்பன் என்பவர் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு தான் செய்யப்பட்டுள்ளது ஆனால் புல வரைபடத்தில் அளவு குறைவாக உள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யும் சமயத்தில் எனது தந்தை மற்றும் எனது அண்ணன்கள் மற்றும் ஊர் மக்கள் வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் தான் அளந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எங்களுக்கு உட்பிரிவு செய்யப்பட்ட அதே தேதியில் வாதிக்கும் அவர் வாங்கிய ஏக்கர் 2.70 சென்ட் நிலத்திற்கு சர்வே எண் 296/2A2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவர் மோசடியாக

செய்து கொண்டார். அந்த உட்பிரிவு 2001 ஆம் ஆண்டில் தான் எங்களுக்கும் வாதிக்கும் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் காட்டிதான் நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட 2001 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் தொடர்ந்து அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல நாங்கள் கிரயம் வாங்கிய தேதியிலிருந்து தொடர்ந்து அனுபவித்து வருகிறோம். அவ்வாறு வாதியும் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் 2 ஏக்கர் மட்டும் அனுபவித்து வருகிறார்.

3. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டதற்கு எனது தந்தையும் ஒப்புதல் கொடுத்து கைரேகை செய்துள்ளார் என்று சொன்னால் அவருக்கு எழுத படிக்க தெரியாது அவரை கட்டாயப்படுத்தி வாங்கி இருக்கலாம். நான் எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்று சொன்னால் 31.08.2018 தேதியில் விருப்ப ஓய்வு பெற்றேன். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2007 ஆம் ஆண்டு. நான் பணியில் இருந்த சமயத்தில் விடுமுறையில் வரும்போது விவசாயம் செய்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விடுமுறையில் வரும் சமயத்தில் எனது தந்தையுடன் சேர்ந்து உழவு செய்து விவசாயம் செய்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அப்போது என்னுடைய சொத்து எவ்வளவு என்று வரப்பு அமைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் பயிர் கடன் பெரும் சமயத்தில் இந்த சொத்திற்கு அடங்கல் மற்றும் புலவரைபடம் பெற்றேன் என்று சொன்னால் இது நாள் வரை பயிர் கடன் பெறவில்லை . நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**முடிவு நேரம் – 01.25 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.